வரலாறு
கொள்குறிவகை வினாவிடைகள்

1. வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது
A) எழுத்து ஆதாரங்கள் கிடைத்துள்ள காலம்
B) எழுத்து ஆதாரங்கள் கிடைக்காத காலம்
C) காலம், இடம், நிகழ்ச்சி ஆகிய மூன்று ஆதாரங்களும் கிடைத்துள்ள காலம்
D) இவைகளில் எதுவுமில்லை

2. ஆதிமனிதன் முதன்முதலில் பழக்கிய விலங்கு
A) மாடு B) குதிரை
C) நாய் D) ஆடு

3. பழைய கற்கால மக்கள்
A) பருத்தி ஆடை அணிந்தனர்
B) கம்பளி ஆடை அணிந்தனர்
C) ஆடையின்றி திரிந்தனர்
D) இலை, மரப்பட்டை, விலங்குகளின் தோல் ஆகியவற்றை ஆடையாக அணிந்தனர்

4. ஆதிச்ச நல்லூர் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் உள்ளது?
A) திருநெல்வேலி B) நீலகிரி
C) கன்னியாகுமரி D) திருவள்ளூர்

5. புதிய கற்காலம் எனப்படுவது
A) கி.மு.1500-கி.மு.600 B) கி.மு.3000-கி.மு.1500
C) கி.மு.10,000 - கி.மு. 4000 D) கி.மு.4000 - கி.மு. 3000

6. முதன்முதலாக மனிதன் பயன்படுத்திய உலோகம்
A) இரும்பு B) செம்பு
C) வெண்கலம் D) தகரம்

7. வேதகால நாகரிகம் எந்த காலத்தைச் சார்ந்தது?
A) புதிய கற்காலம் B) செம்பு கற்காலம்
C) இரும்பு கற்காலம் D) பழைய கற்காலம்

8. ஹரப்பா நாகரிகம் எந்த காலத்தைச் சார்ந்தது?
A) செம்பு கற்காலம் B) புதிய கற்காலம்
C) இரும்பு காலம் D) பழைய கற்காலம்

9. மனிதனின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு
A) நெருப்பை உருவாக்குதல் B) சக்கரம் கண்டுபிடித்தல்
C) மண்பாண்டம் செய்தல் D) பயிரிடுதல்

10. மனிதன் சக்கரத்தை எப்போது கண்டு பிடித்தான்?
A) பழைய கற்காலம் B) புதிய கற்காலம்
C) செம்பு கற்காலம் D) இரும்பு காலம்

11. சிந்துவெளி நாகரிகம் பற்றி அறிய உதவுவது
A) கல்வெட்டுகள் B) செப்புப் பட்டயங்கள்
C) நூல்கள் D) அகழ்வாராய்ச்சி சான்றுகள்

12. மொகஞ்சதாரோ என்பதன் பொருள்
A) பூங்கா நகரம் B) துறைமுக நகரம்
C) பழங்கால நகரம் D) இடுகாட்டுமேடு

13. லோத்தல் என்னும் துறைமுகம் காணப்படும் இடம்
A) குஜராத் B) மகாராஷ்டிரம்
C) தமிழ்நாடு D) ஆந்திரா

14. ஹரப்பா நாகரிகம் எவ்வகையான நாகரிகம்?
A) கிராம நாகரிகம் B) நகர நாகரிகம்
C) மாநகர நாகரிகம் D) பழங்கால நாகரிகம்

15. சிந்துவெளி மக்களுக்கு தெரிந்திராத உலோகம்
A) தங்கம் B) செம்பு
C) இரும்பு D) வெண்கலம்

16. ஹரப்பா என்ற சிந்தி மொழிச் சொல்லின் பொருள்
A) ஆற்றங்கரை நகரம் B) நதிகளுக்கிடைப்பட்ட நகரம்
C) பழங்கால நகரம் D) புதையுண்ட நகரம்

17. சிந்துவெளி மக்களுக்கு தெரியாத விலங்கு
A) குதிரை B) நாய்
C) எருது D) மான்

18. மொகஞ்சதாரோவின் மிகச்சிறந்த அமைப்பாக கருதப்படுவது
A) தானியக் களஞ்சியம் B) பெரியகுளம்
C) நகர அமைப்பு D) வீடுகளின் கட்டமைப்பு

19. மொகஞ்சதாரோவின் மிகப்பெரிய கட்ட அமைப்பு எனக் கருதப்படுவது
A) தானியக் களஞ்சியம் B) பெரியகுளம்
C) அரண்மனை D) வீடுகளின் கட்டமைப்பு

20. சிந்து எழுத்துமுறை இதனைக் கொண்டிருந்தது
A) எழுத்துக்கள் B) சித்திரங்கள்
C) கரோஷ்தி வடிவம் D) இவைகளில் எதுவுமில்லை

21. சிந்துவெளி நாகரிக காலத்தில் விளையாட்டு பொம்மைகள் எதனால் செய்யப்பட்டது?
A) செம்பினால் B) இரும்பால்
C) தோல்பொருட்களினால் D) டெரகோட்டாவினால்

22. சிந்துவெளி மக்களின் எழுத்து வடிவம் எந்த மொழியுடன் தொடர்புடையதாக கருதப் படுகிறது
A) ஹிந்தி B) சீனம்
C) தமிழ் D) மண்டாரியன்

23. உலகிலேயே மிகத் தொன்மையான தென் வரலாற்றறிஞர் கருதப்படுவது
A) கங்கை சமவெளி
B) விந்திய மலைக்கு தெற்கிலுள்ள பகுதி
C) வடமேற்கு சமவெளி
D) இவைகளில் எதுவுமில்லை

24. மனிதயினம் முதன்முதலாக தோன்றியதாக கருதப்படும் இடம்
A) மத்திய தரைக்கடல் நாடுகள் B) அசிரியா
C) அமெரிக்கா D) லெமூரியா

1 .... B	2 C	3 .... D	4 .... A	5 C	6 .... B	7 C	8 .... A	9 .... A	10 .... B
11 .... D	12 .... D	13 .... A	14 .... B	15 C	16 .... D	17 .... A	18 .... B	19 .... A	20 .... B
21 .... D	22 C	23 .... B	24 .... D						

25. திருவள்ளுவர் பிறந்த ஆண்டாகத் தமிழறிஞர்கள் கருதப்படுவது
A) கி.மு.31 B) கி.பி.31
C) கி.மு.13 D) கி.பி.13

26. இடைச்சங்கம் நடைபெற்ற இடம்
A) மதுரை B) தென் மதுரை
C) கபாடபுரம் D) கூடல்நகர்

27. வட வேங்கட மலையென குறிப்பிடப் படுவது
A) விந்தியமலை B) திருப்பதி மலை
C) இமயமலை D) பழனி மலை

28. வரலாற்று காலத்திற்கு முன்னர் பஃறுளியாறு ஓடிய இடம்
A) லெமூரியா கண்டம் B) ஆப்பிரிக்கா கண்டம்
C) இந்திய கண்டம் D) குமரி கண்டம்

29. கூடல்நகர் என்றழைக்கப்படும் நகரம்
A) கூடலூர் B) மதுரை
C) தென்மதுரை D) கபாடபுரம்

30. முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தவர்கள்
A) சேரர்கள் B) சோழர்கள்
C) பாண்டியர்கள் D) இவர்கள் அனைவரும்

31. சங்ககாலத்தில் தமிழ்புலவர்கள் தமிழகத்தை எத்தனை வகையான நிலங்களாக பிரித்திருந்தனர்
A) 5 B) 3
C) 7 D) 9

32. காவிரியில் கல்லணையை கட்டிய சங்ககால மன்னன்
A) இராஜராஜ சோழன் B) இராஜேந்திர சோழன்
C) கரிகால சோழன் D) எவருமில்லை

33. சங்ககால மக்கள் நடுகல்லை எதற்காக நட்டார்கள்
A) முன்னோர்களது நினைவாக
B) சங்ககால அரசர்கள் நினைவாக
C) மன்னன் தான் பெற்ற வெற்றியின் நினைவாக
D) போரி ஈடுபட்டு வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக

34. காடும் காடும் சார்ந்த நிலத்தை சங்ககால புலவர்கள் எவ்வாறு கூறினார்கள்?
A) குறிஞ்சி B) நெய்தல்
C) முல்லை D) மருதம்

35. தமிழ் மொழியை செம்மொழியென எப்போது மத்திய அரசு அறிவித்தது
A) 2005 B) 2004
C) 2010 D) 2008

36. ரிக்வேதகாலம் எனப்படுவது
A) கி.மு.1600-1000 B) கி.மு.1000-600
C) கி.மு1500-600 D) கி.மு.1500-1000

37. ரிக்வேதகாலத்தில் வணிகத்தில் பயன் படுத்தப்பட்ட தங்க நாணய அலகு
A) நிஷ்கா B) சதமணம்
C) கிருஷ்ணலம் D) இவையனைத்தும்

38. பின் வேத காலத்தில் சிறந்து விளங்கிய பெண்மணி
A) கார்கி B) அபலா
C) கோசா D) லோபமுத்ரா

39. சப்தசிந்து எனப்பட்ட பகுதியில் பாயும் நதிகளின் எண்ணிக்கை
A) 5 B) 6
C) 7 D) 12

40. ஆரியர்கள் குடியேறிய பகுதி எவ்வாறு அழைக்கப் பட்டது?
A) சப்த சிந்து B) ஆரிய வர்த்தம்
C) மகதம் D) நாடோடி பகுதி

41. முன் வேத காலத்தைப் பற்றி அறிய உதவுவது
A) இதிகாசங்கள் B) புராணங்கள்
C) ஆரண்யங்கள் D) ரிக்வேதம்

42. விவசாயத்தில் வயலுக்கு உரமிடும் பழக்கம் எப்போது தோன்றியது?
A) சிந்துவெளி காலம் B) முன் வேதகாலம்
C) பின் வேதகாலம் D) எதுவுமில்லை

43. ஆரியர்கள் அறியாத விலங்கு
A) புலி B) குதிரை
C) நாய் D) மாடு

44. ராஜசூயம் என்பது
A) அரசர்களுக்கு உயர்ந்த நிலையினை அளித்தது
B) அரசனின் குதிரை எதிர்ப்பின்றி சென்ற நாடுகளை தன் கட்டுப்பாட்டிற்குரியது என உரிமை கொண்டாடுவது
C) தேர்பந்தயம்
D) இவையனைத்தும்

45. தனுர்வேதம் எனப்படுவது
A) மருத்துவம் B) கட்டடக்கலை
C) சண்டைப் பயிற்சி D) பாடல்கள்

46. சமண மதத்திற்கு உறுதியான அமைப்பைத் தந்தவர்
A) மகாவீரர் B) ரிஷப தேவர்
C) பார்சவநாதர் D) நேமிநாதர்

47. சமணசமயம் மிகவும் வலியுறுத்திய கொள்கை
A) உருவ வழிபாடு B) கொல்லாமை
C) தீண்டாமை D) திருடாமை

48. தமிழ்நாட்டில் சமணச் சிற்பங்கள் காணப்படும் இடங்களுள் ஒன்று
A) கிர்னார் B) கழுகுமலை
C) ஹதிகும்பா D) ஆதிச்சநல்லூர்

49. புத்தர் அறிவுணர்வு பெற்ற இடம்
A) குந்தக் கிராமம் B) மான்பூங்கா
C) கயா D) குஷிநகர்

50. புத்தமதத்தை பின்பற்றிய அரசர்களுள் முக்கியமானவர்
A) சந்திரகுப்தர் B) அசோகர்
C) பிந்துசாரர் D) இவர்களுள் யாருமில்லை

51. மகாவீரர் எத்தனையாவது தீர்த்தங்கரர்?
A) 23 B) 22
C) 1 D) 24

52. புத்தர் பிறந்த இடம்
A) கயா B) சாரநாத்
C) குஷிநகர் D) கபிலவஸ்து அருகில் லும்பினி

25 .... A	26 C	27 .... B	28 .... D	29 .... B	30 C	31 .... A	32 C	33 .... D	34 C
35 .... B	36 .... D	37 .... A	38 .... A	39 C	40 .... B	41 .... D	42 C	43 .... A	44 .... A
45 C	46 .... A	47 .... B	48 .... B	49 C	50 .... B	51 .... D	52 .... D		

53. மகாவீரர் பிறந்த இடம்
A) குந்த கிராமம் B) லும்பினி
C) பாவபுரி D) கயா

54. ஜீனர் என்றால்
A) வென்றவர் B) மகாவீரர்
C) அறிவு பெற்றவர் D) மதகுரு

55. புத்தர் தன் முதல் போதனையை தொடங்கிய இடம்
A) சாரநாத் B) மான்பூங்கா
C) கயா D) வைசாலி

56. யார் காலத்தில் புத்த சமயம் இரண்டாக பிரிந்தது?
A) அசோகர் B) ஹர்ஷர்
C) கனிஷ்கர் D) குப்தர்களது காலம்

57. ஆதிநாதர் எனப்படுபவர்
A) மகாவீரர் B) பார்சவநாதர்
C) புத்தர் D) ரிஷப தேவர்

58. சமணர் கோயில் அமைந்துள்ள இடம்
A) தில்வாரா கோயில் B) சித்தூர்
C) கஜுராஹோ D) இவ்வயனைத்தும்

59. சமணர்களின் புனித நூல்
A) வினய பிடகம் B) பூர்வங்கள்
C) சுத்தபிடகம் D) அபிதம்மபிடகம்

60. சமண மதமும், புத்தமதமும் எந்த நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது?
A) கி.மு.6 B) கி.மு.3
C) கி.மு.7 D) கி.மு.4

61. மூன்றாவது புத்த சமய மாநாடு நடைபெற்ற இடம்
A) பாடலிபுத்திரம் B) காஷ்மீர்
C) ராஜகிருகம் D) வைசாலி

62. தன் தந்தையை சிறையிலடைத்து ஆட்சியை கைப்பற்றியவர்
A) அசோகர் B) பிம்பிசாரர்
C) அஜாதசத்ரு D) பிந்துசாரர்

63. அலெக்சாண்டர் எந்த நாட்டைச் சார்ந்தவர்
A) துருக்கி B) மாசிடோனியா
C) பாரசீகம் D) மங்கோலியா

64. செலுகஸ் நிகோடரை தோற்கடித்தவர்
A) அசோகர் B) அஜாதசத்ரு
C) சந்திரகுப்த மௌரியர் D) பிந்துசாரர்

65. கலிங்கத்தின் மீது படையெடுத்தவர்
A) அசோகர் B) அலெக்சாண்டர்
C) பிம்பிசாரர் D) சந்திரகுப்த மௌரியர்

66. இந்தியாவில் முதன்முதலில் மக்கள் நல அரசை உருவாக்கியவர் யார்?
A) அக்பர் B) அசோகர்
C) ஹர்சர் D) எவருமில்லை

67. மெகஸ்தனிஸ் எழுதிய நூல்
A) அர்த்த சாஸ்திரம் B) முத்ராராட்சம்
C) இண்டிகா D) சாகுந்தலம்

68. சக சகாப்தம் காலக் கணக்கீட்டு முறை எப்போது தொடங்கியது?
A) கி.பி.1 B) கி.மு.1
C) கி.மு.78 D) கி.பி.78

69. யூச்சி இனத்தை சார்ந்தவர்கள் யார்?
A) குஷானர்கள் B) மௌரியர்கள்
C) குப்தர்கள் D) ஹர்ஷர்

70. நான்காவது புத்தசமய மாநாட்டை கூட்டியவர்
A) அசோகர் B) கனிஷ்கர்
C) ஹர்ஷர் D) அஜாதசத்ரு

71. இரண்டாம் அசோகர் எனப்படுபவர்
A) அசோகரது பேரன் B) ஹர்ஷர்
C) சந்திரகுப்தர் D) கனிஷ்கர்

72. யாருடைய காலத்தில் நாளந்தா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது?
A) சமுத்திர குப்தர் B) சந்திரகுப்தர்
C) குமாரகுப்தர் D) ஸ்கந்தகுப்தர்

73. சீனப்பயணி பாகியான் யாருடைய அரசவைக்கு வந்தார்?
A) விக்கிரமாதித்யன் B) சமுத்திரகுப்தர்
C) குமாரகுப்தர் D) கனிஷ்கர்

74. சீனப்பயணி யுவான்சுவாங் யாருடைய அரசவைக்கு வந்தார்
A) விக்கிரமாதித்யன் B) ஹர்ஷர்
C) கனிஷ்கர் D) ஸ்கந்தகுப்தர்

75. ஹர்ஷ சரிதம் நூலை எழுதியவர்
A) ஹர்ஷர் B) பாகியான்
C) யுவான்சுவாங் D) பாணர்

76. யாருடைய காலத்தில் நாளந்தா பல்கலைக் கழகம் அதன் புகழின் உச்ச நிலையை அடைந்தது?
A) ஹர்ஷர் B) குமாரகுப்தர்
C) விக்கிரமாதித்யன் D) ஸ்கந்தகுப்தர்

77. அஜந்தாவிலுள்ள புத்த குகை ஓவியங்களும் சிற்பங்களும் யார் காலத்தை சார்ந்தது?
A) ஹர்ஷர் B) குப்தர்
C) மௌரியர் D) இராட்டிரகூடர்கள்

78. அலகாபாத் கல்வெட்டைப் பொறித்தவர்
A) சந்திரகுப்தர் B) அசோகர்
C) சமுத்திரகுப்தர் D) அரிசேனர்

79. சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டவர் யார்?
A) கனிஷ்கர் B) சந்திரகுப்தர்
C) ஹர்ஷர் D) எவருமில்லை

80. டெல்லி மெகரௌளி இரும்புத்தூண் யார் காலத்தை சார்ந்தது?
A) குப்தர்களது காலம் B) மௌரியர் காலம்
C) கனிஷ்கர் காலம் D) முகலாயர்கள் காலம்

81. எந்த நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் இடைக்காலம் எனப்படுகிறது
A) 8-18 B) 1-8 C) 6-18 D) 8-14

53 .... A	54 .... A	55 .... B	56 C	57 .... D	58 .... D	59 .... B	60 .... A	61 .... A	62 C
63 .... B	64 C	65 .... A	66 .... B	67 C	68 .... D	69 .... A	70 .... B	71 .... D	72 C
73 .... A	74 .... B	75 .... D	76 .... A	77 .... B	78 .... D	79 C	80 .... A	81 .... A	

82. புகழ்பெற்ற விக்ரமசீலம் பல்கலைக் கழகத்தை தோற்றுவித்தவர்கள்
A) குமாரகுப்தர் B) ஸ்கந்தகுப்தர்
C) தர்மபாலர் D) மிகிரபோசர்

83. சௌகான் மன்னர்களில் மிக முக்கியமான மன்னர்
A) ஜெயபாலர் B) ஜெயச்சந்திரன்
C) மகிபாலர் D) பிரதிவிராஜ்

84. நாளந்த பல்கலைக்கழகத்தை புதுப்பித்தவர்
A) குமாரகுப்தர் B) தர்மபாலர்
C) ஸ்கந்த குப்தர் D) கோபாலர்

85. வடஇந்தியாவில் எத்தனை வகையான இராசபுத்திரர்கள் ஆட்சி செய்தனர்
A) 16 B) 26 C) 36 D) 4

86. கல்ஹனார் எழுதிய நூல்
A) இராஜதரங்கினி B) கீதகோவிந்தம்
C) பால இராமாயணம் D) கற்பூர மஞ்சரி

87. கீதகோவிந்தம் என்னும் நூலை எழுதியவர்
A) கல்ஹனார் B) ஜெயதேவர்
C) சோமதேவர் D) இராசசேகரன்

88. சந்தவர் போர் எப்போது நடைபெற்றது?
A) கி.பி.1190 B) கி.பி.1192
C) கி.பி.1025 D) கி.பி.1194

89. அலாவுதீன் கில்ஜி படையெடுப்பால் ஜவ்ஹர் முறைப் படி இறந்த இராணி
A) இராணி பத்மினி B) இரசியா
C) மீனாட்சி D) இராணி மங்கம்மாள்

90. பாஸ்கராச்சாரியாரால் எழுதப்பட்ட சிறந்த வானவியல் நூல்
A) பிரம்மசித்தாந்தம் B) ஆரியபட்டீயம்
C) சிந்தாந்த சிரோன்மணி D) எதுவுமில்லை

91. முதலாம் மகேந்திரவர்மன் பல்லவ மன்னனை தோற் கடித்த சாளுக்கிய மன்னர்
A) முதலாம் புலிகேசி B) இரண்டாம் புலிகேசி
C) ஜெயசிம்மன் D) கீர்த்திவர்மன்

92. பிற்கால மேலை சாளுக்கியர்களின் தலைநகரம்
A) வெங்கி B) வாதாபி C) மால்கெட் D) கல்யாணி

93. எல்லோராவின் கைலாசநாதர் குடைவரைக் கோயிலை உருவாக்கியவர்
A) முதலாம் கிருஷ்ணா B) முதலாம் மகேந்திரவர்மன்
C) நரசிம்மன் D) இராஜசிம்மன்

94. இந்திய கோயில் கட்டடக்கலையின் தொட்டில் எனப் புகழப்படுவது
A) ஐஹோலே B) மதுரை C) பதாமி D) காஞ்சிபுரம்

95. ஐஹோலேவில் உள்ள புகழ் பெற்ற கல்வெட்டை உருவாக்கியோர்
A) அரிசேனா B) அசோகர்
C) இரண்டாம் புலிகேசி D) இரவிகீர்த்தி

96. தக்கோலம் போரில் சோழ மன்னரை தோற்கடித்தவர்
A) இரண்டாம் புலிகேசி B) மூன்றாம் கிருஷ்ணர்
C) அமோகவர்ஷன் D) சிங்கணா

97. இராட்டிரகூட மரபைத் தோற்றுவித்தவர்
A) தந்தி துர்கா B) கீர்த்திவர்மன்
C) விஷ்ணுவர்த்தன் D) சிம்மவிஷ்ணு

98. பல்லவ ஆட்சியை தொண்டை மண்டலத்தில் தொடங்கி வைத்தவர்
A) விஷ்ணுவர்ததன் B) சிம்மவிஷ்ணு
C) முதலாம் மகேந்திரவர்மன் D) நரசிம்மவர்மன்

99. முதலாம் நரசிம்மவர்மனின் பட்ட பெயர்
A) சித்திரக்காரபுலி B) விசித்திரசித்தன்
C) வாதாபி கொண்டான் D) சோணாடு கொண்டான்

100. ஆண்டாள் இயற்றிய நூல்
A) திருவாய்மொழி B) திருவெம்பாவை
C) திருப்பாட்டு D) திருப்பாவை

101. பாண்டிய பேரரசானது எவ்வாறு அழைக்கப்பட்டது?
A) மாகாணம் B) மண்டலம்
C) வளநாடு D) ஊர் அவை

102. அப்பர் என்றழைக்கப்படும் சைவக்குரவர்
A) திருஞான சம்பந்தர் B) மாணிக்கவாசகர்
C) சுந்தரர் D) திருநாவுக்கரசர்

103. சைவக்குரவர் எனப்படுபவர்கள் யாரை வழிபட்டனர்?
A) சிவன் B) விஷ்ணு C) காளி D) சமணர்

104. பல்லவர்களின் தலைநகரம்
A) மகாபலிபுரம் B) ஆற்காடு
C) காஞ்சிபுரம் D) உறையூர்

105. மாமல்லன் எனப்படுபவர்
A) மகேந்திரவர்மன் B) இராஜசிம்மன்
C) நந்திவர்மன் D) நரசிம்மவர்மன்

106. குடைவரைக் கோயிலை அறிமுகப்படுத்தியுவர்
A) மகேந்திரவர்மன் B) நரசிம்மவர்மன்
C) கிருஷ்ணர் D) பாண்டியர்

107. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர்
A) நரசிம்மவர்மன் B) இராஜசிம்மன்
C) நந்திவர்மன் D) சிம்மவிஷ்ணு

108. சீனப்பயணி யுவான்சுவாங் யாருடைய ஆட்சி காலத்தில் தமிழகத்திற்கு வந்தான்
A) நரசிம்மவர்மன் B) விஷ்ணுகோபாலன்
C) மகேந்தரவர்மன் D) நந்திவர்மன்

109. நந்திக் கலம்பகத்தில் புகழப்படும் பல்லவ மன்னன்
A) இரண்டாம் நந்திவர்மன் B) முதலாம் நரசிம்மவர்மன்
C) மூன்றாம் நந்திவர்மன் D) முதலாம் மகேந்திரவர்மன்

110. மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயிலைக் கட்டியவர்
A) முதலாம் நரசிம்மவர்மன் B) இரண்டாம் நரசிம்மவர்மன்
C) முதலாம் மகேந்திரவர்மன் D) நந்திவர்மன்

111. முதலாம் மகேந்திரவர்மனின் பட்டப்பெயர்
A) சங்கீரணசாதி B) சித்திரக்காரப்புலி
C) விசித்திரசித்தன் D) இவையனைத்தும்

82 C	83 .... D	84 .... B	85 C	86 .... A	87 .... B	88 .... D	89 .... A	90 C	91 .... B
92 .... D	93 .... A	94 .... A	95 .... D	96 .... B	97 .... A	98 .... B	99 C	100 .... D	101 .... B
102 .... D	103 .... A	104 C	105 .... D	106 .... A	107 .... B	108 .... A	109 C	110 .... B	111 .... D

112. முந்நீர் பழந்தீவுகள் எனப்பட்ட தீவு
A) இலங்கை B) மாலத்தீவு
C) இந்தோனேஷிய தீவு D) ஜாவா, சுமத்ரா தீவு

113. தஞ்சை பெரியகோவிலை கட்டியவர்
A) இராஜராஜ சோழன் B) இராஜேந்திர சோழன்
C) ஆதித்திய சோழன் D) பிராந்தக சோழன்

114. தஞ்சை பெரியகோயில் எப்போது கட்டப் பட்டது?
A) கி.பி.1000 B) கி.பி.1025
C) கி.பி.1010 D) கி.பி.1014

115. தக்கோலம் போரில் தோல்வியடைந்த சோழ மன்னன்
A) குலோத்துங்க சோழன் B) முதலாம் பராந்தக சோழன்
C) விஜயாலய சோழன் D) இரண்டாம் இராஜராஜசோழன்

116. ஜாவா, சுமத்ரா தீவுகளை வென்ற சோழன்
A) இராஜேந்திர சோழன் B) இராஜராஜ சோழன்
C) குலோத்துங்க சோழன் D) கரிகால சோழன்

117. சுங்கம் தவிர்த்த சோழன் எனப் புகழப்பட்ட சோழன்
A) இராஜராஜன் B) கரிகாலன்
C) பராந்தகன் D) குலோத்துங்கன்

118. கங்கை கொண்ட சோழபுர நகரை நிர்மானித்தவர்
A) இராஜராஜன் B) இராஜேந்திரன்
C) ஆதித்தன் D) குலோத்துங்கன்

119. குடவோலை முறையைப் பற்றி கூறும் கல்வெட்டு உள்ள இடம்
A) திருவந்திபுரம் B) செம்மனூர்
C) உத்திரமேரூர் D) தஞ்சாவூர்

120. சோழர்களது காலத்தில் பூமிபுத்திரர்கள் என்றழைக்கப் பட்டவர்கள் யார்?
A) விவசாயிகள் B) ஜமீன்தாரர்கள்
C) அரசர்கள் D) கொடை வள்ளல்கள்

121. பரத நாட்டியம் யார் காலத்தில் தோன்றியது?
A) பாண்டியர்கள் B) பல்லவர்கள்
C) சோழர்கள் D) களப்பிரர்கள்

122. சோழர்கால கோயில்களின் சிறப்பம்சம்
A) கோபுரம் B) விமானம்
C) சிற்பங்கள் D) அர்த்த மண்டபம்

123. சேக்கிழார் இயற்றிய நூல்
A) மதுரை விஜயம் B) திருப்பாவை
C) நைடதம் D) பெரியபுராணம்

124. யாருடைய காலத்தில் சாதிமுறை மிகக் கடுமையாக இருந்தது?
A) பல்லவர்கள் B) களப்பிரர்கள்
C) சோழர்கள் D) எவையுமில்லை

125. முதலாம் தரெய்ன் போரில் முகமது கோரியை தோற்கடித்தவர்
A) பிருதிவிராசன் B) ஜெயச்சந்திரன்
C) ராஜ்யபாலர் D) ஜெயபாலர்

126. முதலாம் தரெய்ன் போர் எப்போது நடை பெற்றது?
A) கி.பி.1025 B) கி.பி.1051
C) கி.பி.1191 D) கி.பி.1192

127. இரண்டாம் தரெய்ன்போர் எப்போது நடை பெற்றது?
A) கி.பி.1192 B) கி.பி.1194
C) கி.பி.1025 D) கி.பி.1190

128. அரேபியர்கள் இந்தியாவின் மீது படையெடுக்க உடனடிக் காரணம் என்ன?
A) இந்தியாவின் செல்வங்களை கொள்ளையடிக்க திட்டம்
B) இந்தியாவில் தங்களது நிர்வாகத்தை நிலைநாட்ட திட்டம்
C) கடற்கொள்ளையர்களை கட்டுப்படுத்த இந்து அரசர்கள் தவறினார்கள்
D) இவையனைத்தும்

129. இந்தியாவின் மீது படையெடுத்த முதல் முஸ்லிம்
A) கஜினி முகமது B) முகமது பின் கசிம்
C) கோரி முகமது D) பாபர்

130. கூற்று (A) : இந்திய தத்துவம், எண்கள் முறை, வான வியற்கலை ஆகியன அரேபியர்கள் மூலம் ஐரோப்பா வரை பரவியது.
காரணம் (R) : அரேபியர்கள் சில காலம் இந்தியப் பகுதிகளை ஆட்சி செய்தனர்.
A) (A) தவறு, (R) சரி
B) (A) சரி, (R) தவறு
C) (A), (R) சரி. ஆனால் சரியான விளக்கம் அல்ல
D) (A), (R) சரி, சரியான விளக்கமாகும்.

131. சோமநாதர் ஆலயத்தின் மீது கஜினி எப்போது படையெடுத்தார்
A) கி.பி.1001 B) கி.பி.1025
C) கி.பி.1191 D) கி.பி.998

132. நாளந்தா பல்கலைக் கழகத்தின மீது படையெடுத்த முசுலிம் படைத்தளபதி
A) குத்புதீன் ஐபெக் B) மாலிக்கபூர்
C) செலுயூகஸ் நிகோபர் D) முகமது பின் பக்தியார் கில்ஜி

133. முதன்முறையாக துருக்கிய முசுலிம் அரசு இந்தியாவில் ஆட்சியேற்படுத்த காரணமான போர்
A) முதலாம் தரெய்ன் போர் B) இரண்டாம் தரெய்ன் போர்
C) சந்தவார் போர் D) முதலாம் பானிபட் போர்

134. இந்தியாவில் டெல்லி சுல்தானிய ஆட்சியை தோற்றுவித்தவர்
A) முகமது கோரி B) குத்புதீன் ஐபெக்
C) கஜினி முகமது D) அலாவுதீன் கில்ஜி

135. பின்வருவனவற்றில் எது சரியான காலவரிசைப்படி உள்ளது?
A) கில்ஜி - மாம்லுக் - துக்ளக் - சையது - லோடி
B) மாம்லுக் - கில்ஜி - துக்ளக் - லோடி - சையது
C) துக்ளக் - மாம்லுக் - கில்ஜி - சையது - லோடி
D) மாம்லுக் - கில்ஜி - துக்ளக் - சையது - லோடி

136. டெல்லி குதுப்மினாரை கட்டத் தொடங்கியவர்
A) குத்புதீன் ஐபெக் B) இல்துமிஷ்
C) ஆரம்ஷா D) அலாவுதீன் கில்ஜி

137. டெல்லி குதுப்மினாரை கட்டி முடித்தவர் யார்?
A) குத்புதீன் ஐபெக் B) ஆரம்ஷா
C) இல்துமிஷ் D) ரசியா

112 .... B	113 .... A	114 C	115 .... B	116 .... A	117 .... D	118 .... B	119 C	120 .... A	121 C
122 .... B	123 .... D	124 C	125 .... A	126 C	127 .... A	128 C	129 .... B	130 .... D	131 .... B
132 .... D	133 .... B	134 .... B	135 .... D	136 .... A	137 C				

138. கூற்று (A) : இல்துமிஷ் மங்கோலிய படையெடுப்பிலிருந்து இந்தியாவை பாதுகாத்தார்.

காரணம் (R) : இல்துமிஷ் மங்கர் பானிக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்தார்.

A) (A) சரி (R) சரி. மேலும் சரியான விளக்கம்
B) (A) சரி, (R) சரி, ஆனால் சரியான விளக்கம் அல்ல
C) (A) சரி (R) தவறு.
D) (A) யும், (R) யும் இரண்டும் தவறு

139. டெல்லியை ஆண்ட முதல் பெண் சுல்தான்
A) இரசியா B) பேகம் ஹஸ்ரத் மகால்
C) நூர்ஜஹான் D) பானுபேகம்

140. நாற்பதின்மர் குழுவை உருவாக்கிய சுல்தான்
A) பால்பன் B) குத்புதீன்
C) ரசியா D) இல்துமிஷ்

141. நாற்பதின்மர் குழுவை ஒழித்த சுல்தான்
A) அலாவுதீன் கில்ஜி B) பால்பன்
C) ரசியா D) நசுருதின்

142. இல்துமிஷ் எந்த மரபை சார்ந்தவர்?
A) அடிமை B) துக்ளக் C) லோடி D) இல்பாரி

143. தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்ட சுல்தான்
A) பால்பன் B) அலாவுதீன் கில்ஜி
C) இல்துமிஷ் D) முகமது பின் துக்ளக்

144. நிலையான பெரும்படையை வைத்திருந்த டெல்லி சுல்தான்
A) முகமது பின் துக்ளக் B) பால்பன்
C) அலாவுதீன் கில்ஜி D) குத்புதீன் ஐபெக்

145. பொருத்துக. :

பேரரசர்கள்	அவர்களின் முடிவு
a. குத்புதீன் ஐபெக்	1. வெடி விபத்தில் இறந்தார்
b. கியாசுதீன் துக்ளக்	2. நூலகப் படிகட்டில் தவறி விழுந்து இறந்தார்
c. உமாயூன்	3. மேடை சரிந்து விழுந்து இறந்தார்
d. ஷெர்ஷா	4. போலோ விளையாட்டில் இறந்தார்

	a	b	c	d
A)	4	3	2	1
B)	4	1	2	3
C)	4	3	1	2
D)	1	3	2	4

146. நாணய மாற்றுத் திட்டத்தை கொண்டு வந்து தோல்வியடைந்த சுல்தான்
A) இல்துமிஷ் B) அலாவுதீன் கில்ஜி
C) முகமது பின் துக்ளக் D) பெரோஸ் துகள்க்

147. தைமூர் எப்போது இந்தியாவின் மீது படையெடுத்தார்
A) கி.பி.1194 B) கி.பி.1526
C) கி.பி. 712 D) கி.பி. 1398

148. இந்துக்கள் மீது விதித்த வரியாக சுல்தான்கள் வசூலித்த வரி
A) ஜெசியா வரி B) பெசியா வரி
C) கம்ஸ் வரி D) கரோஜ் வரி

149. ஆக்ரா நகரை நிறுவிய பேரரசர்
A) அக்பர் B) ஷாஜகான்
C) சிக்கந்தர் ஷா D) ஷெர்ஷா

150. டெல்லி சுல்தான்களில் கடைசி சுல்தான்
A) சிக்கந்தர் லோடி B) இப்ராஹிம் லோடி
C) பால்பன் D) நசுருதின்

151. இந்தியக்கிளி என்றழைக்கப்பட்ட கவிஞர்
A) அமீர்குஸ்ரு B) அமீர்ஹாசன்
C) அல்பரூனி D) அபுல்பாசல்

152. துருக்கிய நாணய முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்திய துருக்கிய அரசர்
A) முகமது பின் துக்ளக் B) அலாவுதீன் கில்ஜி
C) இல்துமிஷ் D) குத்புதீன் ஐபெக்

153. விஜயநகர பேரரசு எந்த நதிக்கரையில் தோற்றுவிக்கப் பட்டது?
A) கிருஷ்ணா B) கோதாவரி
C) காவேரி D) துங்கபத்ரா

154. விஜயநகர பேரரசு எப்போது தோற்றுவிக்கப் பட்டது?
A) கி.பி.1526 B) கி.பி.1536 C) கி.பி.1336 D) கி.பி.1300

155. கீழ்கண்டவற்றில் எது சரியானது?
A) சங்கம, சாளுவ, துளுவ, அரவீடு
B) சங்கம, துளுவ, சாளுவ, அரவீடு
C) துளுவ, சங்கம், சாளுவ, அரவீடு
D) சங்கம, அரவீடு, சாளுவ, துளுவ

156. விஜயநகரப் பேரரசை தோற்றுவித்தவர்
A) ஹரிகரர், புக்கர் B) கிருஷ்ண தேவராயர்
C) வித்யாரண்யர் D) சாயனா

157. அஷ்டதிக்கஜங்கள் யாருடைய அரசவையில் இருந்தனர்
A) சந்திரகுப்தர் B) கிருஷ்ணதேவராயர்
C) அக்பர் D) ஹர்ஷர்

158. கிருஷ்ணதேவராயரால் எழுதப்பட்ட நூல்கள்
A) ஆமுக்தமல்யாதம் B) உஷாபரிநயம்
C) ஜாம்பவதிகல்யாணம் D) இவை அனைத்தும்

159. தலைக்கோட்டை போர் நடைபெற்ற ஆண்டு
A) 1526 B) 1556 C) 1565 D) 1557

160. விஜயநகர பேரரசின் புகழ்மிக்க அரசர்
A) ஹரிகரர் B) புக்கர்
C) கிருஷ்ணதேவராயர் D) இராமராயர்

161. சங்கராச்சரியர் பிறந்த இடம்
A) தால்வண்டி B) மேவார்
C) ஸ்ரீ பெரும்புதூர் D) காலடி

162. சங்கராச்சரியர் பரப்பிய கொள்கை
A) அத்வைதம் B) விஷிஷ்டாத்வைதம்
C) துவைதம் D) மத்துவம்

163. குருநானக் நிறுவிய மதம்
A) வீரசைவம் B) சீக்கிய மதம்
C) சைவம் D) வைணவம்

138 .... A 139 .... A 140 .... D 141 .... B 142 .... D 143 .... A 144 .... C 145 .... A 146 .... C 147 .... D
148 .... A 149 .... C 150 .... B 151 .... A 152 .... C 153 .... D 154 .... C 155 .... A 156 .... A 157 .... B
158 .... D 159 .... C 160 .... C 161 .... D 162 .... A 163 .... B

164. பக்தி இயக்கம் எப்போது தோன்றியது?
A) இடைக்காலம் B) பண்டைய காலம்
C) வேத காலம் D) இவைகளனைத்தும்

165. துளசிதாசர் எழுதிய நூல்
A) தோகா B) தசபோதம்
C) இராமசரிதமனாஸ் D) பால இராமாயணம்

166. சூஃபி இயக்கம் ஆரம்பமான இடம்
A) இந்தியா B) ஈராக் C) துருக்கி D) பாரசீகம்

167. லிங்காயத்துகள் என்றழைக்கப்படுபவர்கள் எம்மதத்தினர் ஆவார்?
A) வீரசைவம் B) வைணவம் C) சூஃபி D) சமணம்

168. இராமானுஜர் எந்த மதத்தினை சார்ந்தவர்
A) சைவம் B) வைணவம் C) வீரசைவம் D) துவைதம்

169. நாலாயிர திவ்ய பிரபந்தத்தை தொகுத்தவர்
A) நம்பியாண்டார் நம்பி B) பெரியாழ்வார்
C) சேக்கிழார் D) நாதமுனி

170. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்கள்?
A) 12 B) 36 C) 63 D) 4

171. பாபர் எப்போது இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்
A) கி.பி.1526 B) கி.பி.1556
C) கி.பி.1191 D) கி.பி.1398

172. இந்திய மண்ணில் முதன்முதல் எப்போது பீரங்கி பயன்படுத்தப்பட்டது?
A) முதலாம் தரெய்ன் போர் B) முதலாம் பானிப்பட் போர்
C) தலைக்கோட்டை போர் D) கலிங்கப் போர்

173. முதலாம் பானிப்பட் போர் எப்போது நடைபெற்றது?
A) கி.பி.1556 B) கி.பி.1761
C) கி.பி.1526 D) கி.பி.1194

174. முதலாம் பானிப்பட் போரில் பாபர் யாரை வென்றார்?
A) இப்ராஹிம் லோடி B) பிருதிவிராசன்
C) ஜெயச்சந்திரன் D) தௌலத்கான் லோடி

175. இந்தியாவில் முகலாயப் பேரரசை தோற்றுவிக்க காரணமான போர்
A) முதலாம் தரெய்ன் போர் B) முதலாம் கன்னோசிப் போர்
C) சாந்த்வா போர் D) முதலாம் பானிப்பட் போர்

176. சௌஷா போரிலும், கன்னோசிப் போரிலும் ஷெர்ஷா யாரை தோற்கடித்தார்
A) ஜெயச்சந்திரன் B) உமாயூன்
C) அக்பர் D) பாபர்

177. அக்பரது நிர்வாகத்தின் முன்னோடியாக கருதப்படுபவர்
A) ஷெர்ஷா B) உமாயூன்
C) அசோகர் D) ஹர்ஷர்

178. அந்தப்புர அரசு அல்லது பாவாடை ஆட்சி யார் காலத்தில் நடைபெற்றது?
A) ஜஹாங்கீர் B) ஷாஜகான்
C) அக்பர் D) ஔரங்கசீப்

179. அக்பரது பாதுகாவலர் எனப்படுபவர் யார்?
A) கௌடில்யர் B) முகமதுகவான்
C) உமாயூன் D) பைரம்கான்

180. நவீன நாணய முறையின் தந்தையென புகழப்படுபவர்
A) அக்பர் B) ஷெர்ஷா
C) இல்துமிஷ் D) அசோகர்

181. இரண்டாம் பானிப்பட் போர் எப்போது நடைபெற்றது?
A) 1526 B) 1527 C) 1556 D) 1565

182. ஜெசியா வரியை நீக்கியவர்
A) அக்பர் B) ஷாஜகான்
C) ஔரங்கசீப் D) இல்துமிஷ்

183. நீதிச்சங்கிலி முறையினை அறிமுகப் படுத்தியவர்
A) அக்பர் B) ஷெர்ஷா
C) ஜஹாங்கீர் D) ஷாஜகான்

184. தீன் இலாஹி என்ற சமயத்தினை தோற்றுவித்தவர்
A) ஷெர்ஷா B) அக்பர்
C) ஷாஜகான் D) அசோகர்

185. தவறுபடா ஆணையை வெளியிட்டவர்
A) ஔரங்கசீப் B) பாபர்
C) உமாயூன் D) அக்பர்

186. மன்சப்தாரி முறையை இந்தியாவில் அறிமுகப் படுத்தியவர்
A) அக்பர் B) ஜஹாங்கீர்
C) ஷெர்ஷா D) அலாவுதீன் கில்ஜி

187. அக்பர் கட்டக்கலைக்கு பயன்படுத்திய சலவை கற்களின் நிறம்
A) வெள்ளை B) சிவப்பு
C) நீலம் D) எல்லா கற்களையும்

188. வெள்ளை நிற பளிங்கு கற்களை கொண்டு கட்டடங்களை கட்டியவர்
A) அக்பர் B) ஜஹாங்கீர்
C) உமாயூன் D) ஷாஜகான்

189. பொருத்துக. :

	பெயர்		பொருள்
a.	நூர்ஜஹான்	1.	உலகினை வெல்பவர்
b.	ஷாஜகான்	2.	அரண்மனை ஒளி
c.	மெகருன்னிஷா	3.	உலகின் ஒளி
d.	ஜஹாங்கீர்	4.	உலகின் அரசன்

	a	b	c	d
A)	2	1	3	4
B)	3	4	2	1
C)	1	3	4	2
D)	4	2	1	3

190. தாஜ்மகால் யாருடைய நினைவாக கட்டப்பட்டது?
A) நூர்ஜஹான் B) மெகருன்னிஷா
C) மும்தாஜ் D) ஷாஜஹான்

191. தாஜ்மகால் கட்டிய தலைமை சிற்பி
A) உஸ்தாத் இஷா B) தான்சேன்
C) ஷாலிமர் D) நிஷாத் தத்

192. அக்பரது அரசவையில் வருவாய் துறை அமைச்சராக இருந்தவர்
A) இராஜா பகவான்தாஸ் B) இராஜமான்சிங்
C) பீர்பால் D) இராஜதோடர்மால்

164 .... A	165 C	166 .... D	167 .... A	168 .... B	169 .... D	170 C	171 .... A	172 .... B	173 C
174 .... A	175 .... D	176 .... B	177 .... A	178 C	179 .... D	180 .... B	181 C	182 .... A	183 C
184 .... B	185 .... D	186 .... A	187 .... B	188 .... D	189 .... B	190 C	191 .... A	192 .... D	

193. ஜஹாங்கீரால் தூக்கிலிடப்பட்ட சீக்கிய குரு
A) குருகோவிந்த்சிங் B) குரு அர்ஜூன்சிங்
C) குருதேஜ்பகதூர் D) குருராம்தாஸ்

194. குருதேஜ்பகதூர் யாரால் தூக்கிலிடப்பட்டார்
A) அக்பர் B) ஜஹாங்கீர்
C) ஔரங்கசீப் D) ஷாஜகான்

195. கால்சா என்ற இராணு அமைப்பை உருவாக்கிய சீக்கிய குரு
A) குருகோவிந்த் சிங் B) குருராம்தாஸ்
C) குருஅர்ஜுன் சிங் D) குருதேஜ் பகதூர்

196. கொரில்லா போர் முறையை நன்கறிந்தவர்கள்
A) மௌரியர்கள் B) சுல்தானியர்கள்
C) மராத்தியர்கள் D) துருக்கியர்கள்

197. மலை எலி என்றழைக்கப்பட்டவர்
A) சிவாஜி B) ராஜா ஜெய்சிங்
C) அப்சல்கான் D) செயிஷ்டகான்

198. சிவாஜி சத்ரபதி என்ற பட்டத்தை எப்போது சூட்டிக் கொண்டார்
A) 1660 B) 1665 C) 1666 D) 1674

199. அஷ்டப்பிரதான் என்றழைக்கப்பட்ட எட்டு அமைச்சர்கள் யார் அரசவையில் இருந்தனர்?
A) கிருஷ்ணதேவராயர் B) சிவாஜி
C) சந்திரகுப்தர் D) அக்பர்

200. மூன்றாம் பானிப்பட் போர் எப்போது நடைபெற்றது?
A) 1526 B) 1556 C) 1761 D) 1766

201. சிவாஜியின் காப்பாளர் யார்?
A) தாதாஜி கொண்ட தேவ் B) ஷாஜிபான்ஸ்லே
C) பாஜிராவ் D) துக்காபாய்

202. சிவாஜியை கொல்வதற்கு பிஜப்பூர் சுல்தானால் அனுப்பப் பட்ட நபர்
A) செயிஷ்டகான் B) ராஜாஜெய்சிங்
C) பாஜிராவ் D) அப்சல்கான்

203. சிவாஜி காலத்தில் சவுத் மற்றும் சர்தேஷ் முகி என்பன
A) வரிகள் B) அமைச்சர்கள்
C) சமயத் தலைவர் D) படைப்பிரிவுகள்

204. ஆட்டோ மானிய துருக்கியர் கான்ஸ்டாண்டி நோபிளை எப்போது கைப்பற்றினார்கள்?
A) 1498 B) 1453 C) 1487 D) 1401

205. இந்தியாவிற்கு கடல் வழியை கண்டுபிடித்த முதல் ஐரோப்பிய நாடு
A) ஸ்பெயின் B) இங்கிலாந்து
C) பிரான்ஸ் D) போர்த்துகீசிய நாடு

206. இந்தியாவை வந்தடைந்த முதல் ஐரோப்பியர்
A) பார்த்தலோமியோ டயஸ் B) வில்லியம் ஹாக்கின்ஸ்
C) வாஸ்கோடகாமா D) அல்போன்சா

207. வாஸ்கோடகாமா இந்தியாவின் கள்ளிக் கோட்டை வந்தடைந்த ஆண்டு
A) 1453 B) 1487 C) 1498 D) 1501

208. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி தொடங்கப்பட்ட ஆண்டு
A) 1600 B) 1644 C) 1664 D) 1609

209. ஜஹாங்கீர் அரசவைக்கு முதலில் வந்த ஆங்கிலேயர்
A) தாமஸ்ரே B) வில்லியம் ஹாக்கின்ஸ்
C) ஜார்ஜ் வில்லியம்ஸ் D) வாஸ்கோடகாமா

210. நீலநீர் அல்லது நீலக்கடல் கொள்கையை கொண்டு வந்த போர்த்துகீசிய ஆளுநர்
A) பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா
B) அல்போன்சா-டி-அல்புகர்கு
C) வாஸ்கோடகாமா
D) பார்த்தலோமிஸ் டயஸ்

211. அம்பாய்னா படுகொலை நிகழ்ந்த ஆண்டு
A) 1610 B) 1605 C) 1623 D) 1647

212. சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை எப்போது கட்டப்பட்டது?
A) 1639 B) 1640 C) 1699 D) 1696

213. வில்லியம் கோட்டை எங்குள்ளது?
A) கடலூர் B) பம்பாய்
C) தரங்கம்பாடி D) கல்கத்தா

214. முதல் கர்நாடகப் போர் நடைபெற்ற ஆண்டு?
A) 1746-1748 B) 1748-1756
C) 1756-1764 D) 1767-1769

215. புனித டேவிட்கோட்டை எங்குள்ளது?
A) பம்பாய் B) கடலூர்
C) நாகப்பட்டினம் D) மசூலிப்பட்டினம்

216. பிளாசிப்போர் எப்போது நடைபெற்றது?
A) 1756 B) 1764 C) 1757 D) 1765

217. பக்சார் போர் நடைபெற்ற ஆண்டு?
A) 1757 B) 1764 C) 1746 D) 1779

218. இருட்டறை (அ) கருந்துளை துயரச் சம்பவம் நடைபெற்ற ஆண்டு
A) 1756 B) 1757 C) 1764 D) 1748

219. ஆற்காட்டின் வீரர் எனப்படுபவர்
A) இராபர்ட் கிளைவ் B) டியூப்ளே
C) சர் அயர்கூட் D) சந்தாசாகிப்

220. பிளாசிப்போருடன் தொடர்புடையவர்
A) சுஜா உத் தௌலா B) மீர்காசிம்
C) ஷா ஆலம் D) சிராஜ் உத் தௌலா

221. பிரிட்டிஷ் இந்தியாவின் முதல்தலைமை நீதிபதியாக இருந்தவர்
A) வாரன் ஹேஸ்டிங்க்ஸ் B) சர் தாமஸ்
C) சர் எலிஜா இம்பே D) சர் மோர்ஸ்

222. ஒழுங்குமுறை சட்டத்தின் படி உச்சநீதி மன்றம் அமைக்கப்பட்ட இடம்
A) கல்கத்தா B) மதராஸ்
C) பம்பாய் D) பெஷாவர்

193 .... B	194 C	195 .... A	196 C	197 .... A	198 .... D	199 .... B	200 C	201 .... A	202 .... D
203 .... A	204 .... B	205 .... D	206 C	207 C	208 .... A	209 .... B	210 .... A	211 C	212 .... B
213 .... D	214 .... A	215 .... B	216 C	217 .... B	218 .... A	219 .... A	220 .... D	221 C	222 .... A

223. பிட் இந்திய சட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது?
A) 1773 B) 1763 C) 1784 D) 1786

224. ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
A) 1774 B) 1763 C) 1784 D) 1773

225. இந்திய பொது குடிமையியல் பணியின் தந்தை எனப்படுபவர்
A) வாரன்ஹேஸ்டிங்க்ஸ் B) ஜான்ஷோர்
C) காரன்வாலிஸ் D) வெல்லெஸ்லி

226. துணைப்படைத் திட்டத்தை அறிமுகப் படுத்தியவர்
A) வெல்லெஸ்லி B) டல்ஹௌசி
C) வில்லியம் பெண்டிங் D) காரன்வாலிஸ்

227. மைசூரின் புலி எனப் புகழப்படுபவர்
A) ஹைதர் அலி B) திப்புசுல்தான்
C) கிருஷ்ணா D) சிவாஜி

228. நிலையான நிலவரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
A) 1853 B) 1830 C) 1820 D) 1793

229. வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தில் சேர்ந்த முதல்நாடு
A) ஹைதராபாத் B) அயோத்தி
C) மைசூர் D) தஞ்சாவூர்

230. நிலையான காவலர் துறையை உருவாக்கியவர்
A) வெல்லெஸ்லி B) டல்ஹௌசி
C) காரன்வாலிஸ் D) வில்லியம் பெண்டிங்

231. பட்டய சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
A) 1815 B) 1803 C) 1810 D) 1813

232. பிண்டாரிகளை ஒழித்தவர்
A) வில்லியம் பெண்டிங் B) ஹேஸ்டிங்கஸ்
C) ஜான்ஷோர் D) டல்ஹௌசி

233. ஹேஸ்டிங்க்ஸ் காலத்தில் இரயத்துவாரி முறை எங்கு அறிமுகப்படுத்தப்பட்டது
A) மதராஸ் மாகாணம் B) வங்காளம்
C) பீகார் D) பம்பாய் மாகாணம்

234. முதல் பர்மியப் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை
A) சிகௌலி B) பாரிஸ்
C) டெனாசரிம் D) யாண்ட்பூ

235. இந்திய கவர்னர் ஜெனரல் நிர்வாக குழுவில் நியமிக்கப்பட்ட முதல் சட்ட ஆலோசகர்
A) ஜான்ஷோர் B) தாமஸ் மன்றோ
C) மெக்காலே D) ஆர்ம்ஹஸ்ட்

236. சதி என்னும் உடன்கட்டை ஒழிப்பு சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு
A) 1856 B) 1829 C) 1830 D) 1823

237. தக்கர்களை அடக்க யார் தலைமையில் பெரும் படையென்று வில்லியம் பெண்டிங் அமைத்தார்
A) மேஜர் ஸ்லீமென் B) தளபதி எல்பின்டன்
C) மெக்காலே D) ஆர்ம்ஹஸ்ட்

238. நரபலி கொடுக்கும் வழக்கம் எப்பகுதி மக்கள் கொண்டிருந்தனர்?
A) ஒரிசாவில் வாழ்ந்து வந்த மலைவாழ் மக்கள்
B) கத்தியவார் பகுதி மக்கள்
C) இராஜஸ்தான் பகுதி மக்கள்
D) மேற்கூறிய அனைத்துப் பகுதியிலும்

239. வாரிசு இழப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தியவர்
A) டல்ஹௌசி B) வெல்லெஸ்லி
C) வில்லியம் பெண்டிங் D) ஹேஸ்டிங்க்ஸ்

240. வாரிசு இழப்புக் கொள்கையின்படி இணைக்கப்பட்ட முதல் நாடு
A) ஜான்சி B) அயோத்தி
C) சதாரா D) ஜெய்பூர்

241. டல்ஹௌசி காலத்தின் கோடைக்கால தலைநகராக செயல்பட்ட இடம்
A) கல்கத்தா B) சிம்லா
C) டேராடூன் D) டார்ஜிலிங்

242. இருப்பாதை முதன்முதலில் எப்போது அறிமுகப்படுத்தப் பட்டது?
A) 1854 B) 1856 C) 1853 D) 1855

243. நாட்டின் முதல் இருப்புபாதை அறிமுகப் படுத்தப்பட்ட பகுதி
A) பம்பாய்-தானே B) ஹௌரா-ராணிகஞ்ச்
C) சென்னை - அரக்கோணம் D) டெல்லி - பானிப்பட்

244. இந்திய இருப்புப் பாதையின் தந்தை எனப்படுபவர்
A) வெல்லெஸ்லி B) ஜான்ஷோர்
C) கானிங் D) டல்ஹௌசி

245. நாடு முழுவதும் தபால் மற்றும் தந்தி அலுவலங்கள் யாருடைய ஆட்சியின் போது அமைக்கப்பட்டது?
A) டல்ஹௌசி பிரபு B) கானிங் பிரபு
C) கர்சன் பிரபு D) ரிப்பன் பிரபு

246. சார்லஸ் உட்ஸ் கல்விக்குழு எப்போது அமைக்கப் பட்டது?
A) 1856 B) 1854 C) 1853 D) 1881

247. விதவைகள் மறுமணச்சட்டம் எப்போது இயற்றப் பட்டது?
A) 1829 B) 1835 C) 1849 D) 1856

248. நவீன இந்தியாவை உருவாக்கியவர்
A) ரிப்பன் பிரபு B) கானிங் பிரபு
C) டல்ஹௌசி பிரபு D) கர்சன் பிரபு

249. சென்னை - அரக்கோணம் இருப்புப்பாதை எப்போது அமைக்கப்பட்டது?
A) 1853 B) 1854 C) 1856 D) 1860

250. இந்தியாவில் அஞ்சல் வில்லையை அறிமுகப் படுத்தியவர்
A) டல்ஹௌசி B) கானிங்
C) ரிப்பன் D) வில்லியம்பெண்டிங்

251. முதல் இந்திய சுதந்திர போர் என்றழைக்கப் படும் பெரும்புரட்சி நடைபெற்ற ஆண்டு
A) 1806 B) 1846 C) 1856 D) 1857

252. பெரும்புரட்சி தோன்றிய போது இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்தவர்
